# கிருபையுள்ள வார்த்தை ®

**GRACIOUS WORD Luke 4:22**


Vol - 15 | April ஏப்ரல் | 2014

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 9/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-





ஒரிசாவில் ஆத்தும ஆதாய பணியாளர்களாக 24 மாத பயிற்சி முடித்து, பட்டம் பெற்ற விசுவாசிகள். இவர்களின் முயற்சியால் 77 பேர் திருமுழுக்கு பெற்று, 11 புதிய தொழுகைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


கௌரவ ஆசிரியர் **Betty Choate** ஆசிரியர் **PCPR**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| சிலுவை மரணம் ... ? | 3 |
| தினசரி மதம் | 7 |
| மனோபாவத்தை ... | 9 |
| யோபுவின் சரிதை ... | 13 |
| சத்திய வசனத்தை | 17 |
| பரி.ஆவி அன்றும் இன்றும் | 23 |
| தின தியானம் | 33 |


*In memory of*
**J.C. CHOATE**


ஆசிரியர் குழு

*Guest Editors :* **BETTY CHOATE**
**JERRY & PAULA BATES**

**Editor : PCPR**

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,
**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,
**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
சட்ட ஆலோசகர் : **M. முரளி** B.A.,B.L.



**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi,
Madurai 625 016. India


**கிருபையுள்ள வார்த்தை**

**"சிலுவையைப் பற்றி சிந்திக்க வைக்கும் சீர்மிகும் வார்த்தை"**

## கிருபையுள்ள வார்த்தை
## TV நிகழ்ச்சிகள்

பாருங்கள்!



பயன் அடையுங்கள்


**தமிழன் T.V. யில்**

ஞாயிறு காலை - 6.45
வெள்ளி காலை - 6.00

செய்தியாளர் :
போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

## ஜெபியுங்கள்

- ஒவ்வொரு மாதமும் திண்டுக்கல் மற்றும் குன்னூரில் நடைபெறும் ஆத்தும ஆதாய பயிற்சி வகுப்புகளுக்காக...
- இரு மாதத்திற்கு ஒரு முறை தெலுங்கானா பகுதி மிரயலகுடாவில் நடைபெறும் ஆத்தும ஆதாய பயிற்சி வகுப்புகளுக்காக...




**Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.78**

# சிலுவை மரணம் உண்மையா?



**P.C. பிலேமோன் ராஜா**
ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை

இயேசுவின் சிலுவையை சுற்றி நடந்த நிகழ்ச்சிகள் அவர் சிலுவையில் மரித்ததை உறுதி செய்கிறது. இதைக்குறித்த ஒரு வேத தியான ஆராய்ச்சி இந்த பாடம்.

வெள்ளிக்கிழமை – இயேசுவினுடைய மரண நாள்; அவர் சிலுவையில் அறையப்பட்டார்.

## சிலுவையில் முதல் 3 மணி நேரம்

(மத்தேயு 27, மாற்கு 15, லூக்கா 23, யோவான் 19)

**அ. சேவகர்கள் சீட்டுப்போட்டனர்**

1. காவல் காத்த நான்கு வீரர்கள் – யோவான் 19:23

2. உடையை பங்கிட்டனர் : யோவான் 19:24

3. இது திடீர் நிகழ்ச்சியல்ல, தீர்க்கத்தரிசன நிறைவேறுதல் – சங் 22:18

**ஆ. மக்கள் கூட்டம் அவமானப்படுத்துதல்**

1. சிலுவை அருகே நின்று பார்த்தவர்கள் – லூக் 23:35

2. அவ்வழியே சென்றவர்கள் தங்கள் தலைகளை துலுக்கி, தூஷணம் பேசினார்கள். – மாற் 15:29,30

3. சிலுவையிலிருந்து இறங்கிவரச் சொன்னார்கள் – மத் 27:40

4. அதிகாரிகள், பிரதான ஆசாரியர்கள், வேதபாரகர்களும் இகழ்ந்தனர் – மாற் 15:31, மத் 27:73, லூக் 23:25

5. இராஜாவானால் சிலுவையிலிருந்து இறங்க வரட்டும் என்றனர் – மத் 27:42

6. மற்றவர்களை இரட்சித்தான், தன்னை தானே இரட்சித்துக்கொள்ள முடியவில்லை என்றனர் – மாற் 15:31

7. இரண்டு குற்றவாளிகளும் கோபத்தை வெளிப்படுத்தினர் – மாற் 15:32, மத் 27:44

**இ. இயேசு ஜெபித்தார்**

தன்னை துன்புறுத்தினவர்களுக்காக இயேசு ஜெபித்தார் – லூக் 23:34, மத் 5:44

**ஈ கள்ளனின் விண்ணப்பம்**

1. துவக்கத்தில் இரு கள்ளனும் திட்டினர் – மத் 27:44, மாற் 15:32

2. அவர்களில் ஒருவன் மனம் மாறினான் – லூக் 23:39-41

3. ஆண்டவரே உம்முடைய ராஜ்ஜியத்தில் அடியேனை நினைத்தருளும் என்றான் – லூக் 23:42

4. என்னுடன் பரதீசில் இருப்பாய் என்றார் இயேசு – லூக் 23:43

5. பரதீசு என்பது மரித்த நீதிமான்கள் காத்திருக்கும் இடம்.

**உ. நண்பர்கள் புலம்பினர்**

1. சிலுவையின் அருகே இயேசுவின் தாயும், மற்றவர்களும் - யோவான் 19:25

2. மரியாளின் ஆத்துமாவை பட்டயம் ஊடுருவும் எச்சரிக்கை நிறைவேறியது - லூக் 2:35

3. மேலும் சிலர் - லூக் 23:49, மாற் 15:41, யோ 19:26

**ஊ. இயேசுவின் அக்கரை**

தாயின் மீது அக்கரை - யோவான் 19:26, 27

## கடைசி 3 மணி நேரம்

(மத் 27, மாற் 15, லூக் 23, யோவா 19)

**அ. இது இரகசியம்**

லூக் 23 : 44 ன்படி சூரியனின் முழு வெளிச்சமான நேரத்தில் பூமியில் அந்தகாரம் உண்டாயிற்று, சூரியன் இருளடைந்தது (லூக் 23 : 45)

இது கிரகணம் போன்றது. ஆனாலும் பஸ்கா பண்டிகை, யாத் 12:6ன் படி முழு நிலவு வேளையாக இருந்திருக்க வேண்டும்.

1. தேவலாயம் திரைச்சீலை கிழிந்தது - லூக் 23: 44, 45

2. வெளிச்சத்திற்கும் ஆசாரியர் மட்டுமே போக வேண்டிய இடத்திற்கு வழி திறந்தார்.

3. ஒன்பதாம் மணி வரைக்கும் பூமியை இருள் கவ்வியது (பகல் 3 மணி வரைக்கும்).

**ஆ. பாடுபடும் இரட்சகர்**

1. நம் பாவங்கள் அவர் மீது சுமத்தப்பட்டது (ஏசா 53:6, 1பேது 2:24)

2. நமக்காக பாவமானார் - 2 கொரி 5:21

3. தேவனை அவரை கிருபாதார பலியாக ஏற்படுத்தினார் (ரோம 3: 25)

4. ஜீவ ஒளியை கொடுக்க (யோவா 8:21), புறம்பான இருளை அனுபவித்தார் (மத் 8:12).

**இ. இயேசு பேசினார்.**

1. சிலுவையில் முடிவு நெருங்கும் போது 4 முறை பேசினார்.

2. முதலாவது 9ம் மணி வேளையில் ஏலி ஏலி லாமா சபக்தானி (மத் 27: 46, சங் 22: 1, 6-8, 12-18) கிறிஸ்துவின் மரணம் திடீரென்று அல்ல, தேவ திட்டம் நிறைவேறவே நடந்தது ஆகும்.

3. எல்லாம் முடிந்தது என்றார் (யோவா 19:30)

4. தாகமாயிருக்கிறேன் என்றார் (யோவா 19:28)

5. தேவனிடம் ஆவியை ஒப்படைத்தார்.

**ஈ. எது முடிந்தது**

1. மனிதனை மீட்கும் ஊழியம் முடிந்தது.

2. பிதாக்கள், தீர்க்கதரிசிகள் கண்ட கனவு முடிந்தது.

3. இது தோல்வியின் சத்தமல்ல, வெற்றியின் கூக்குரல், நிம்மதியின் சத்தம்.

**இதற்கு ஈடாக**

1. முட்கிரீடத்திற்கு பதிலாக – கிரீடம்

2. நிர்வாணத்திற்கு பதிலாக – உடை

3. கனவீனத்திற்கு பதிலாக – மகிமை

4. காயங்களுக்கு பதிலாக – தொழுகை

**உ. கடைசியாக, இயேசு சிலுவையில் மரித்தது உண்மையே, எப்படி?**

1. சத்தமாய் கூப்பிட்டு (லூக் 23:46)

2. இப்படிச் சொல்லி (லூக் 23:46)

3. தலையை சாய்த்து (யோவ 19 : 30)

4. வேத வாக்கியங்களின்படி (1கொரி 15:3)

5. ஜீவனை விட்டார் (லூக் 23:46, மாற் 15:37)

இயேசு சிலுவையில் மரித்தார் என்பது யூகமோ, கற்பனையோ அல்ல.

**ஊ. மரண வேளையில் நடந்த அற்புதங்கள்**

1. இயேசு மரித்த வேளையில் பூமியதிர்ச்சி ஏற்பட்டது (மத் 27 :54)

2. பூமியதிர்ந்ததினால் கன்மலைகள் பிளந்தன (மத் 27:51)

3. கல்லறைகள் திறந்தன.

4. நித்திரையடைந்திருந்த பரிசுத்தவான்களின் சரீரங்கள் எழுந்திருந்தன (மத் 27 :53)

5. அவர்கள் உயிர்த்தெழுந்து எருசலேமில் அநேகருக்கு காணப்பட்டனர் (மத் 27:52)

6. இயேசுவை சிலுவையில் அடித்த ரோம நூற்றுக்கு அதிபதி அவர் ஜீவனை விட்டதை கண்டு, இவர் மெய்யாகவே நீதிபரர் என்றான் (மத் 27: 54, லூக் 23:47); மெய்யாகவே இந்த மனிதன் தேவகுமாரன் என்றார் (மாற் 15:39).

7. மத் 27:54ல் காவல் காத்தவர்கள் மெய்யாகவே தேவனுடைய குமாரன் என்றார்கள். ஆம் இயேசு சிலுவையில் மரித்து, உயிர்தெழுந்ததினாலே தேவகுமாரன் என்று நிரூபிக்கப்பட்டார் (ரோம 1:4).

பிரியமானவர்களே! இயேசு உண்மையிலே சிலுவையிலே மரித்தார் என்பதற்கு எத்தனை ஆதாரங்கள் மேலே செல்லப்பட்டிருக்கின்றன. கிறிஸ்துவுடனே திருமுழுக்கிலே உயிர்த்தெழுந்தவர் யாவரும், 1 கொரி 11:26 “ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.” என்ற வசனத்தி படி வீதி விதியாக, நபர் நபராக ஒவ்வொரு நாளும் இதை சொல்லிக்கொண்டே இருப்போம். வெறும் இயேசுவுக்கே புகழ், இயேசுவுக்கே மகிமை என்ற வார்த்தையல்ல. மாறாக, இயேசு நம் பாவங்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்ததை சொல்லுவோம்.

இயேசு மரித்தது கற்பனையல்ல, பாரீர் உலகமே, நண்பரே, எதிரிகளே இத்தனை நிகழ்வுகள் அவர் சிலுவையில் மரித்ததை கூறும் ஆதாரங்கள். இயேசு சிலுவையில்

மரித்தாரென்று அவரின் நண்பர்கள் அல்ல, அவரின் எதிரிகளே முதலில் சாட்சிக்கொடுத்தனர் என்று சரித்திர ஆதாரத்துடன் கூறுங்கள்.

மேலும், கிறிஸ்தவ சகோதரனே, சகோதரியே! எதரிகளை அவரை தூற்றவாவது அவரது பாடு, மரணம், உயிர்தெழுதலை பற்றி கூறிக்கொண்டே இருக்கின்றனரே. இயேசுவை பற்றிய சத்தியத்தை அறிந்திருந்தும் அதனை சொல்லாமற்போனால் நீங்கள் எதிரியை விட கேவலமான துரோகம் செய்கிறீர்கள். ஐயோ ! ஐயோ ! (1 கொரி 9:16).

மன்னிக்கவும்! நன்றியறிதலும், உணர்வும், உணர்ச்சியுமற்ற திருமுழுக்கு பெற்ற கூட்டமே, சிலுவையில் அடித்த எதிரி அவரை தேவகுமாரன் என்று சொன்னான். கிறிஸ்துவிற்கும் கிறிஸ்தவத்திற்கும் எதிரிகள் இயேசு சிலுவையில் மரிக்கவேயில்லை, அவர் தேவகுமாரனே கிடையாது என்றும், கன்னியின் வயிற்றில் பிறந்ததை 100க்கு 100 முழுமையாய் நம்பினாலும் அவரை தூற்றிக்கொண்டே இருக்கின்ற வேளையில், நாம் இன்னும் வீடு கட்டி, பட்டம் மேலே பட்டம் பெற்று, பதவி மேல் பதவி பெற்று, தேவனுடைய ஆசீர்வாதத்தை தலைமுறையாய் அனுபவிப்போரே, இயேசு சிலுவையில் மரித்ததினாலே, இரத்தம் சிந்தி நமக்கு பாவமன்னிப்பை பெற்று தந்த தேவ குமரான் என்று சொல்லுங்கள்.



ஒரு மேய்ப்பன் தான் வெகு தூரத்தில் அமர்ந்து கொண்டு, தன் மந்தையை நேர்த்தியாய் மேய்க்க முடியாது. அவன் எப்பொழுதும் மந்தையுடனேயே இருக்க வேண்டும்.

ஊழியங்களுக்கு பணம் கொடுத்தால் போதும், ஜெபித்தால் போதும், மிஷனரிகளை தாங்கினால் போதும் என்று நினைத்து, தன் சொந்த வாயால் சொல்லாத நன்றியில்லா கூட்டமாக இஸ்ரவேல் ஜனங்களை போல இருக்கிறோமா? எதிரிகள் தூற்றுகிறார்கள்; நாமோ வெல்வேறு வேலைகளில் Busy என்று அமைதியாக இருப்போமானால், நாம் துரோகிகளே!

Atleast ஏப்ரல், மே மாதங்களில் – அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, பேரப்பிள்ளைகள், கூலியாள், முதலாளி, அதிகாரி, ஆசிரியர், மாணவர், மருந்துவர், பொறியாளர், வழக்கிறஞர் என நீங்கள் 1 வயது முதல் 100 வயது வரை இருந்தாலும், தினசரி கிறிஸ்து மரித்தது உண்மை என உறுதியாக சொல்லுவோம். எதிரிகளின் வாயை அடையுங்கள். (தீத்து:11)

இந்த பாடத்தின் முன்பகுதிகளை Xerox எடுத்து எல்லாரிடமும் கொடுங்க்ள். முழு பாடத்தையும் சபைகளில் வாசித்து காட்டுங்கள். இயேசு சீக்கிரம் வருகிறார் (வெளி 22:20).

– உங்கள் சகோதரன்
**PCPR** (ஆசரிரியர்)

# தினசரி மதம்

## DAILY RELIGION



J.C. CHOATE

பைபிளிலும் நிறைய மதங்களைப் பற்றி நாம் வாசிக்க முடிகின்றது; ஆனால் ஒரே ஒரு மதத்தை தான் தூய்மையான மதமாக அடையாளம் காட்டுகிறது, அதுதான் கிறிஸ்துவின் மார்க்கம் (மதம்), யாக் (1:27). தேவனுடைய வார்த்தை நிறைய மதங்களை குறிப்பிடுவது மட்டுமின்றி, அப்படிப்பட்டவை இன்று கத்தோலிக்கம், நாமகர்ணக்கூட்டங்கள் போன்றவையின் வடிவிலும் உள்ளன. ஆனால் கிறிஸ்துவினுடைய சரீரத்தைப் (கிறிஸ்துவின் சபை) பற்றி மட்டும் நாம் பேசுகையில் கூட, அதின் அங்கத்தினர்களும் வித்தியாசப்பட்ட மத உணர்வுகளை சேர்ந்தவர்களாக உள்ளனர். உதாரணமாக, சபையினுடைய சில அங்கத்தினர்கள் "கோடைகால" மதத்தையும், சிலர் "பெரிய கூட்டம்" என்ற மதத்தையும், வேறு சிலர் "ஞாயிறு மட்டும்"என்ற மதத்தையும் பின்பற்றுகின்றனர்.

ஜனங்கள் சபையினுடைய பல்வேறு கூட்டங்களிலும் பங்குபெற்று தங்கள் மதநம்பிக்கையை பலவிதத்தில் வெளிப்படுத்துகின்றனர்; ஆனால் கோடைகாலத்தில் மட்டுமே மத நம்பிக்கையுடையவர்களாக இருப்பது போதாது. அதேப்போல சில அங்கத்தினர்கள், ஏதாவது ஒரு சுவிஷேசக் கூட்டங்களின் நாட்களில் மட்டும் மிக ஆர்வமாக பங்குபெற்றுவிட்டு, பிறரையும் அழைத்துவந்து பங்குபெறச் செய்து, பின் சுவிஷேசக் கூட்டங்களின் நாட்கள் முடிந்தவுடன் எல்லா நிகழ்ச்சிகளிலும் பங்கு பெறுவதில்லை. மீண்டும் நான் சொல்வதென்னவெனில், ஏதோ சுவிஷேக்கூட்ட நாட்களில் மட்டும் மதவாதியாக இருப்பது போதாது. இதைத் தொடர்ந்து சில விசுவாசிகள் ஞாயிறு காலை, மாலை மட்டும் சபை கூடுகைகளில் பங்கு பெறுவது இருதயத்திற்கு வலியை உண்டு பண்ணுகிறது; ஏனெனில் ஆண்டவருடைய நாளில் மட்டும் தேவனை ஆராதித்து "ஞாயிறு மதத்தை" பின்பற்றுவது போதாது. பைபிள் கூறுவது என்னவெனில், ஒருவர் கிறிஸ்துவின் மதத்தை பின்பற்றவிரும்பினால் அவர் அதை தினசரி பழக்கமாக மாற்றிக் கொள்ள வேண்டும். கிறிஸ்து தாமே கூறியது என்னவெனில் "ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். (லூக்கா 9:23). கிறிஸ்து சொல்ல விரும்புவது என்னவென்று சற்று கவனமாக பார்ப்போம். முதலாவது இடத்தில் அவர் நம் எல்லோரையும், தன்னை பின்பற்றும்படி அழைப்பு கொடுக்கின்றார். இரண்டாவது இடத்தில் அவர் கூறுகையில், நாம் அவரை பின்பற்றுவோமானால் நாம் நம்மையே

வெறுத்து உலகத்தின் அனைத்து காரியங்களையும் விட்டுவிட்டு அவரை பின்பற்ற வேண்டும். இறுதியாக, மூன்றாவது இடத்தில், நாம் அவரை பின்பற்றுவோமாகில் அவருடைய சிலுவையை அல்லது அவருடைய வேலையை தினந்தோறும் எடுத்துக்கொண்டு அவரை பின்பற்ற வேண்டும். ஆகையால் நாம் இங்கே பார்ப்பது என்னவெனில் கிறிஸ்துவினுடைய மதம் என்பது ஒரு தினசரி மதமாகும்.

இப்பொழுது, ஒரு நபர் கிறிஸ்துவின் மதத்தை பயிற்சி செய்ய விரும்பினால் நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில், இது ஒரு முழு நேர வேலையாக இருக்குமென்றும், அதை தினசரி செய்ய வேண்டும் என்பதுமாகும். மேலும் அவர் புரிந்துகொள்ள வேண்டியது என்னவெனில், ஒரு மதம் என்பது சிலவற்றை செய்யும்படி கோரும். உதாரணமாக **தினசரிமதம் தினசரி விசுவாசத்தை எதிர்பார்க்கிறது.** கிறிஸ்துவின் மதத்தை பின்பற்ற விசுவாசம் அவசியமாகும். ''விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்று பவுல் கூறுகிறார் (ரோ 1:17). மேலும் அவர் கூறுகையில் ''விசுவாசத்தினாலே வராத யாவும் பாவம்'' என்கிறார் (ரோ14:23). அதுமட்டுமல்ல விசுவாசமில்லாமல் தேவனை பிரியப்படுத்துமுடியாது (எபி 11:6), என்று எபிரெய எழுத்தாளர் கூறுவதை மறந்துவிடக்கூடாது ஆகையினால் ஆண்டவர் நம்மிடம் செய்ய விரும்புவதை நடத்திட தினசரி விசுவாசம் அவசியம் என்கிறார்.

மேலும் **தினசரி மதமானது தினசரி அன்பை எதிர்பார்க்கிறது**. நாம் வேறு எதையும்விட அதிகமாக தேவனை நேசிக்க வேண்டும். மேலும் தேவன், இதனுடன் கூட ஒத்த கட்டளையாக கூறுவது, உன்னைப்போல் பிறனையும் நேசி (மத் 22:37-39). அப்போஸ்தலனாகிய யோவான் கூறுவதைப்போல நாம் ஒருவரிலொருவர் அன்பு கூறவேண்டும், "பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். (1யோ 4:7). அன்பு இல்லாமல் வேறு எதினாலும் கிறிஸ்தவர்கள் தேவனை சேவிக்க முடியாது. இது சாத்தியமில்லாத ஒன்றாகும். ஆனால் நாம் நினைவில் வைக்க வேண்டியது என்ன தெரியுமா? அன்பைப் பற்றி பேசிக் கொண்டிருப்பது போதாது, ஒருவர் அதை செயல்களினால் நிரூபிக்க வேண்டும்.

**தினசரி மதம் என்பது தினசரி ஜெபத்தை எதிர்பார்க்கிறது.** "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்று பவுல் கூறுகிறார் (1 தெச 5:17), கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு தருணத்திலும் ஜெபிக்க வேண்டும். அவர்கள் தங்களுக்காகவும் தங்கள் நண்பர்கட்காகவும் சபைக்காகவும் மேலும் பலவற்றிற்காகவும் ஜெபிக்க வேண்டும். ஒருவர் தேவனிடம் ஜெபத்தினால் தொடர்பை இழக்கும்போது அவரிடமிருந்து பிரிந்து செல்லக்கூடும்.

# மனோபாவத்தை மாற்றுவோம்

## Let us Change our Attitude

– சகோ. கிங்ஸ்லி ராஜா

ஒரே விதமான பிரச்சனைக்கு, ஒரு சிலர் பயந்தோடி, கடுமையான சூழ்நிலைகளை தவிர்த்து அல்லது அதினால் துவண்டுபோய், மேலும் சோர்வுற்று போவதையும்; மற்ற சிலர் அவைகளை தைரியமாக சந்தித்து, அதிலிருந்தே பெலன் பெறுவதையும் நாம் பார்க்க முடிகின்றது. உதாரணமாக, யோபுவின் வாழ்க்கையில், அவரும் அவரது மனைவியும் ஆகிய இருவருமே நஷ்டங்களை பொதுவாக தான் சந்தித்தனர். அதாவது மந்தைகள், பிள்ளைகள், வீடு என எல்லா இழப்புமே அவர்கள் இருவருக்குமே பொதுவானதுதான். அப்படியிருக்க, "தேவனை தூஷித்து ஜீவனை விடு" என்று அவரது மனைவி சொன்னது ஏன்? இன்னொரு முனையில், யோபுவோ, மேலும் பல சரீர உபாதைகளையும் (வேதனை) சந்தித்தும், அவரது மனோபாவம் (Attitude) வித்தியாசமாக இருந்ததே ! இந்த வித்தியாசத்திற்கு என்ன காரணம்?

### ஒரு தனிநபரின் மனோபாவம்

ஒரே விதமான காற்று வீசினாலும், ஒரு இடத்திலிருந்து புறப்படும் இரண்டு கப்பல்கள், எதிர் எதிர் திசையில் எப்படி செல்ல முடிகிறது. ஒவ்வொரு கப்பலும் காற்றை எதிர்த்து செல்ல பயண விதிகளை தன்னுடைய இலக்கை அடைய சரிசெய்தும் சுக்கானை பயன்படுத்தியும் முடிகிறது. மனிதனுடைய மனோபாவத்தையும் அப்படியே அவன் மாற்றி தீர்மானிக்க முடியும். அநேகர், "என் பழக்கமே இதுதான்", "என் சுபாவமே அப்படிதான்", ''சிறு வயதிலிருந்து என் குணம் அப்படிதான்", "நான் நினைத்தாலும் என்னை மாற்ற முடியவில்லை" என சொல்லியே, கடவுளின் விருப்பப்படி தங்கள் வாழ்வை மாற்றாமல் தங்களை ஏமாற்றி வருகின்றனர்.

நம்முடைய மனோபாவத்தை (Attitude) மாற்ற முடியும் என்பதற்கு சில பைபிள் உதாரணங்களை பார்க்கலாம்...


### சவுலின் மனோபாவங்கள்

பழைய ஏற்பாட்டு காலத்தில் இஸ்ரவேலின் முதல் இராஜாவான, சவுலின் மனோபாவ மாற்றங்களை பாருங்கள். தன்னை தகுதியற்றவனாக மிகவும் தாழ்மை குணத்தை வெளிப்படுத்தின வாலிபனான சவுல் கூறுவதை கவனிப்போம்! "அப்பொழுது சவுல் பிரதியுத்தரமாக: நான் இஸ்ரவேல் கோத்திரங்களிலே சிறிதான பென்யமீன் கோத்திரத்தான் அல்லவா? பென்யமீன்

கோத்திரத்துக் குடும்பங்களில் எல்லாம் என் குடும்பம் அற்பமானது அல்லவா?" (1சாமு 9:21).

தன்னை இஸ்ரவேலின் ராஜாவாக தேர்ந்தெடுக்க வந்த தீர்க்கதரிசியான சாமுவேலிடம் சவுல் வெளிப்படுத்திய தாழ்மையின் மனோபாவம் இது.

இதே சவுல் பின்பு, தேவனுக்கு பலியிடுகிற விஷயத்தில் (ஆராதனை) மனமேட்டிமையின் மனோபாவத்தை வெளிப்படுத்தினான் அப்பொழுது சாமுவேல்: நீர் உம்முடைய பார்வைக்குச் சிறியவராயிருந்தபோது அல்லவோ இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவரானீர்; கர்த்தர் உம்மை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணுவித்தாரே. இப்போதும் கர்த்தர்: நீ போய் அமலேக்கியராகிய அந்தப் பாவிகளைச் சங்கரித்து, அவர்களை நிர்மூலமாக்கித் தீருமட்டும், அவர்களோடு யுத்தம்பண்ணு என்று சொல்லி, உம்மை அந்த வழியாய்



இன்ப நேரத்தில்
மாத்திரம்
தேவன் தங்களோடு
இருப்பதாகவும்,
துன்பம் வரும்போது தேவன்
இருப்பதில்லை என்றும்
அநேகர் எண்ணுகின்றனர்.

அனுப்பினார். இப்படியிருக்க, நீர் கர்த்தருடைய சொல்லைக் கேளாமல், கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தது என்ன என்றான். சவுல் சாமுவேலை நோக்கி: நான் கர்த்தருடைய சொல்லைக் கேட்டு, கர்த்தர் என்னை அனுப்பின வழியாய்ப் போய், அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகைக் கொண்டு வந்து, அமலேக்கியரைச் சங்காரம் பண்ணினேன்.

ஜனங்களோ உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குக் கில்காலிலே பலியிடுகிறதற்காக, கொள்ளையிலே சாபத்தீடாகும் ஆடுமாடுகளிலே பிரதானமானவைகளைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள் என்றான். அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம். இரண்டகம் பண்ணுதல் பில்லிசூனியப் பாவத்துக்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது; நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர்

உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான். (1சாமு 15:17-23).

மற்றொரு முறையும் சவுலின் மனோபாவம் தேவனுக்கு விரோதமாக, தேவன் தெரிந்தெடுத்த மனிதனை கொலை செய்யும் அளவு மாறியது. மறுநாளிலே தேவனால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுலின்மேல் இறங்கிற்று; அவன் வீட்டிற்குள்ளே தீர்க்க தரிசனம் சொல்லிக் கொண்டிருந்தான்; அப்பொழுது தாவீது தினந்தோறும் செய்கிறபடி, தன் கையினால் சுரமண்டலத்தை வாசித்துக் கொண்டிருந்தான்; சவுலின் கையிலே ஈட்டியிருந்தது. அப்பொழுது சவுல் தாவீதைச் சுவரோடே சேர்த்து உருவக் குத்திப்போடுவேன் என்று ஈட்டியை அவன்மேல் எறிந்தான்; ஆனாலும் தாவீது விலகி இரண்டு தரம் அவனுக்குத் தப்பினான். (1சாமு 18:10,11).

மேலும், ஒரு கட்டத்தில் கர்த்தருக்கு அருவருப்பானதை செய்யவும் அவன்



நாம் சர்வ ஜாக்கிரதையாகப் பேசவேண்டும். இல்லாவிடில் நாமும் அறிவில்லாத வார்த்தையினாலே எத்தனையோ நல்ல மனதை புண்படுத்திவிடுவோம்.

மனோபாவம் மாறியது. அதாவது தேவனிடம் இருந்து மறுஉத்தரவு வரவில்லை என்று கூறி, அஞ்சனம் பார்க்கிற ஸ்திரியிடம் சென்றான். (1 சாமு 25:6-14).

பார்த்தீர்களா ! முதலில் தேவனுக்கு முன் தாழ்மையின் மனோபாவம் கொண்டிருந்த சவுலின் மனோபாவம் எவ்வாறெல்லாம் மாறியது என்று கவனித்தீர்களா? நம்மிலும் அநேகருக்கு, பாவி என்று உணர்ந்து திருமுழுக்கு பெறும்போது, ஆரம்பத்தில் இருக்கும் அல்லது இருந்த மனோபாவம், நாட்கள் போக போக தேவனிடம் இருப்பதில்லை. "தேவனே ! தகுதி இல்லாத என்னுடைய பாவங்களையும் மன்னித்து, ஏற்றுக்கொண்டீரே! உமக்கு கோடான கோடி நன்றி ஐயா. என் வாழ்க்கை முழுவதும் உமக்கே கொடுப்பேன். இனி நான் உம் அடிமை" என்றெல்லாம் ஆரம்பத்தில் கூறும் மனோபாவம், பின்பு, நாளடைவில், "கடவுளையே தேடிட்டு இருந்தா, குடும்பத்தை பார்க்க வேண்டாமா?" "சர்ச்சா சோறுபோடும்" என்றெல்லாம் மாறிவிடுகிறது. தகுதியில்லாத, அற்பமான, குப்பையை போன்ற நம்மை, அவருடைய மகிமையான குடும்பத்தில் சேர்த்துக்கொண்டதெல்லாம் மறந்துபோயிற்றா? மீட்கப்பட்ட போது சில காலம் சபைக்கு தினமும் சென்ற மனோபாவம், தினமும் மூன்று

வேளையும் பைபிள் படித்த மனோபாவம், சந்திக்கும் நபருக்கெல்லாம் சுவிஷேசம் சொன்ன மனோபாவம், மணிக்கணக்காக ஜெபம் செய்த அந்த மனோபாவம், நாளடைவில் எங்கே போனது? 'சபை' என்று சொன்னாலே சலிப்பு வருகிறதோ? பைபிளை திறந்தாலே தூக்கம் வருகிறதோ?

பிரியமானவர்களே ! நம்முடைய மனோபாவத்தை தேவனுக்கு பிரியமாக மாற்றுவோம். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் தேவன் விரும்புவதை செய்யாமல் போக காரணங்களையும், சூழ்நிலைகளையும் தேடும் மனோபாவம் நமக்கு இருக்கிறதா? தேவன் நம்மீது வைத்த அன்பு நம் இரத்தத்தில் கலந்திருக்குமானால், நம் மனோபாவம் வித்தியாசமாக இருக்குமே?

பாருங்கள் ! மிகச்சிறந்த அப்போஸ்தலனாகிய பவுலுக்கு கூட ஒரு சமயம் இருந்த மனோபாவம் இதுதான்... "அப்பொழுது பர்னபா என்பவன் மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானைக் கூட அழைத்துக்கொண்டுபோகவேண்டும் என்றான். பவுலோ: அவன் பம்பிலியா நாட்டிலே நம்மை விட்டுப் பிரிந்து நம்மோடேகூட ஊழியத்துக்கு வராததினாலே, அவனை அழைத்துக்கொண்டு போகக்கூடாது என்றான். இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோபமூண்டபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள். பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறிச் சீப்புருதீவுக்குப் போனான். பவுலோ சீலாவைத் தெரிந்துகொண்டு, சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு, புறப்பட்டு, சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து, சபைகளைத் திடப்படுத்தினான்." (அப் 15:13-40). ஆனாலும் அவர், எப்போதும் தேவனுடனும், தேவ ஊழியத்திலும் இணைந்திருந்ததினால் அவருடைய மனோபாவம் எப்படி மாறியது பாருங்கள்....

"லூக்காமாத்திரம் என்னோடே இருக்கிறான். மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன். (2 தீமோ 4:11).

கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் சரியான மனோபாவத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலி 2:5).

மேலும், நாம் நினைவில் வைக்க வேண்டியது, " மாம்சசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். " (ரோ 8:6).

# 14 தேவனுக்கு முன்பாக மனிதன் நீதிமானாயிருப்பது எப்படி?



- சகோ. P.R. சாமி (பெங்களூரு)

கடந்த பாடத்தில் எலிகூ கூறிய காரியங்களை படித்தோம். இந்தப் பாடத்தில் ''தேவனுக்கு முன்பாக மனிதன் நீதிமானாயிருப்பது எப்படி" என்று பார்ப்போம்.

யோபு அப்படி இருக்கக்கூடுமோ என்று ஆச்சரியப்பட்டான் (யோபு 9:2). யோபின் மூன்று நண்பர்களில் ஒருவனான பில்தாத்தும், அது முடியாது என்றே எண்ணினான். அதோடு மனிதன் சுத்தமாயிருக்க முடியாது என்ற தன்னுடைய தத்துவத்தையும் கூறினான். இப்படியிருக்க மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருப்பது எப்படி? ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் சுத்தமாயிருப்பது எப்படி? சந்திரனை அண்ணாந்து பாரும். அதுவும் பிரகாசியாமலிருக்கிறது? நட்சத்திரங்களும் அவர் பார்வைக்குச் சுத்தமானவைகள் அல்ல. புழுவாயிருக்கிற மனிதனும், பூச்சியாயிருக்கிற மனுபுத்திரனும் எம்மாத்திரம் என்றான் (25:4-6).

மனிதன் பாவமில்லாமல் இருக்க முடியாது. ஆகவே தன் சுய நீதியினிமித்தம் மனிதன் பரிசுத்தமாக ஜீவிக்க முடியாது. இருப்பினும் தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்படத்தக்கவனாக, அவருக்கு முன்பாக நீதிமானாக நடக்கக்கூடும். யோபு நடந்தான், நாமும் நடக்கக்கூடும். நம் நீதி, ஒழுக்க கிரியைகளினிமித்தமாகவும் அல்ல. அல்லது, பழைய நியாயப் பிரமாணத்தின் கிரியைகளினிமித்தமாகவும் அல்ல (கலா 2:16). ஆனால் கிறிஸ்துவுக்குக் கீழ்படிந்திருப்பதன் மூலமே. நாம் கிறிஸ்துவின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து ஜீவிக்கிறபோது அவருடைய ரத்தம் நம்மை தொடர்ந்து சுத்திகரித்து, தேவனுக்கு முன்பாக நீதிமானாகச் செய்கிறது (1யோவான் 1:7-9). அறிவில்லாத வார்த்தைகளை வசனித்ததாக இரண்டு முறை யோபுவை எலிகூ அவ்வாறே கடிந்துகொண்டார் (யோபு 38:2). பின்பு யோபுவே அதை ஒப்புக்கொள்கிறான் (யோபு 42:3,6). எப்படிப்பட்ட அறிவில்லாத வார்த்தையை பேசினான் என்று பார்க்கலாம்.

முதலாவது, தெய்வீக நீதியை கேள்வி கேட்டான். தேவனை குறை கூறாவிட்டாலும், யோவுவை சுய நீதிக்காரன் என்ற தன் நண்பர்களுடைய குற்றச்சாட்டை சரியான முறையில் எலிகூ எதிர்த்து நின்றாலும், யோபு தான் நிரபராதி என்று

கூறிக்கொள்வதினாலே, சர்வ வல்லவரின் நியாயத்தை சந்தேகிப்பவனாக இருந்தான். ஆகவேதான் தேவன் அவனைப் பார்த்து, ‘‘நீ என் நியாயத்தை அவமாக்குவாயோ? நீ என்னை நீதிமானாக்கிக் கொள்ளும்படிக்கு என்மேல் குற்றம் சுமத்துவாயோ?’’ என்றார் (யோபு 40:8).

இரண்டாவது, கர்த்தர் தனக்கு விரோதியாக மாறினார் என்ற முடிவுக்கு வந்தான் (யோபு 10:16, 17, 19, 6-12). கஷ்டப்படுகிறவனுக்கு, விரோதி ஒருவன் தான் தன்னை அப்படி நடத்தக்கூடும் என்று எண்ணுவான். தன் துன்பங்களின் மத்தியில் அப்படி கூறி தேவனுடைய நியாயத்தை கேள்வி கேட்டவனாக இருந்தான் (யோபு 33:10-12). ஆனால் கர்த்தர் விரோதியாயிருக்காமல், அவனுடைய உற்ற நண்பனாக இருந்தார்.

இன்னும் யோபு, தேவன் தம்மை மறைத்து கொண்டார். அவரைக் காணவில்லை என்று எண்ணினான். “இதோ நான் முன்னாகப் போனாலும் அவர் இல்லை. பின்னாகப்போனாலும் அவரைக் காணேன். இடதுபுறத்தில் அவர் கிரியை செய்தும் அவரைக் காணேன். வலதுபுறத்திலும் நான் அவரைக் காணாதபடிக்கு ஒளிந்திருக்கிறார்’’ (யோபு 23:8,9). பரிதாபம்! நொந்துபோன மனிதன் அப்படி கூறிவிட்டான். இது அறிவில்லாத வார்த்தை. ஏனெனில் என்றும் தேவன் அவனோடு கூடவே இருந்திருக்கிறார்.

நாமும் அப்படியே தாங்க முடியாத கஷ்டங்கள் வந்தவுடன், தேவன் நம்மை விட்டு எங்கோ வெகு தூரம் சென்று விட்டதாக எண்ணி விடுகிறோம். இன்ப நேரத்தில் மாத்திரம் தேவன் தங்களோடு இருப்பதாகவும், துன்பம் வரும்போது தேவன் இருப்பதில்லை என்றும் அநேகர் எண்ணுகின்றனர். இதுவும் அறிவில்லாத வார்த்தைதான்.

ஏனெனில் வேதம் போதிக்கிறது. ‘‘கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டு பிடிக்கத்தக்கதாகத் தம்மை தேடும்படியாக அப்படிச்செய்தார். அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைத்திருக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம். அப்படியே உங்கள் புலவர்களிலும், சிலர் நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்’’ (அப் 17:27,28). இந்த சிற்சில காரியங்களிலே யோபு தவறு செய்திருப்பினும் அவனுடைய மூன்று நண்பர்களான எலிப்பாஸ், பில்தாத், சோப்பாரைக் காட்டிலும் தேவனைப் பற்றிய நிதானமான அறிவு உடையவனாக இருந்தான் (யோபு 42:7).

**வார்த்தைகள்** : உலகம் முழுவதும் எங்கு பார்த்தாலும் வார்த்தைகளால்

நிரப்பப்பட்டிருக்கின்றன. உலகில் பேசப்படும் பெரும்பான்மையான வார்த்தைகள் அறிவில்லாத வார்த்தைகள் தான் என்று கூறினால் மிகையாகாது. மனிதன் அடிக்கடி அறிவில்லாத வார்த்தையை வசனிக்கிறவனாக இருக்கிறான். மதவட்டாரங்களில் எத்தனை விதமான பேச்சுக்கள். அவைகளில் எவ்வளவு வார்த்தைகள் அறிவில்லாத வார்த்தைகள்.

சத்தியம் என்றும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்க முடியாது. ஆனால் சத்தியம் மதவட்டாரங்களில் பேசப்படும் வார்த்தைகளில் தான் எத்தனை முரண்பாடுகள், பேதங்கள். அவைகள் ஒன்றுக்கொன்று முன்னுக்குப் பின் முரணாக இருப்பதோடு மட்டுமல்லாமல், தேவனுக்கு விரோதமாகவும் இருக்கிறது. யோபுவின் தவறு, அதாவது அறிவில்லாமல் வசனித்த காரியங்கள் தேவனை சம்பந்தப்படுத்திய காரியங்கள் என்று அப்புறம் அறிந்து கொண்டான். ஆனால் முன்பே அப்படி எண்ணவில்லை. தேவனை அறிவில்லாமல் குறை கூறும் மக்கள் மற்றும் கள்ளப்போதகர்கள், இவர்கள் விஷயத்தில் எவ்வளவு உண்மை என்று பாருங்கள். "தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும் நியாயப்பிரமான போதகராயிருக்க விரும்புகிறார்கள்" (1தீமோ 1:7).

விஞ்ஞானத்தை பொறுத்தமட்டிலும் இது உண்மையாயிருக்கிறது. விஞ்ஞானிகள் கூட கடந்த காலங்களில் கூறப்பட்ட எத்தனையோ காரியங்கள் இன்று உண்மை அல்ல என்று ஒத்துக்கொள்கிறார்கள். அவைகள் அறிவில்லாத வார்த்தைகள் தானே. எப்படி இருப்பினும், விஞ்ஞானத்தில் இருக்கும் உண்மை எப்படி மாற்றப்பட கூடாதோ, அப்படியே மத விஷயங்களில் இருக்கும் உண்மையையும் மாற்றப்பட முடியாது. நேற்று அது சத்தியமானால் இன்றும் அது சத்தியமாகத்தான் இருக்க முடியும். இந்த கொள்கையை நாம் எல்லா அம்சங்களிலும் பயன்படுத்தலாம். மனித வரலாற்று சரித்திரத்தை நோக்கும் பொழுது மனிதன் பேசிய அநேக காரியங்கள் அறிவில்லாத வார்த்தைகளாகக் காண்கிறோம். மனித உறவு சம்பந்தப்பட்ட விஷயத்திலும் இது உண்மை.

மனிதனால் கூறப்பட்டு வந்த அநேக காரியங்கள் அறிவில்லாத வார்த்தைகள். சிறிதும் மாற்றம் இல்லாமல் ஒரே கருத்து மூன்று பேர்களிடையே சொல்ல இயலாது. மற்றவர்களைக் குறித்து சொல்லப்படும் அநேக வார்த்தைகள் இன்று அறிவில்லாத வார்த்தைகளாகவே இருக்கின்றன. அவர்கள் கூறியவண்ணமாக அநேக காரியங்கள் நடைபெறவில்லை. பாதி உண்மையான காரியத்தை நீங்கள்

கேட்டால், ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஏனெனில் அந்த பாதி உண்மையும் மாற்றப்பட்ட ஒன்றாக இருக்கும்.

யோபுவின் மூன்று நண்பர்களும் யோபுவைப்பற்றி எத்தனையோ நல்ல காரியங்களை பேசினர். ஆனாலும் அதோடு சொல்லக்கூடாத ஒரு குற்றச்சாட்டை கூறினார். தாங்கள் என்ன கூறுகிறோம் என்று தங்களுக்கே தெரியாது. அந்த நிலையில்தான் அறிவில்லாத வார்த்தையை பேசினர். நாமும் அன்றாட வாழ்க்கையில் எவ்வளவோ பேசுகிறோம். நாம் சர்வ ஜாக்கிரதையாகப் பேசவேண்டும். இல்லாவிடில் நாமும் அறிவில்லாத வார்த்தையினாலே எத்தனையோ நல்ல மனதை புண்படுத்திவிடுவோம். ஆகவே தாவீதைப் போல நாமும் தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்ளுகிறவர்களாக இருக்க வேண்டும். தாவீது கூறுகிறார் ‘‘உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமையானவைகள். என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும். உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன். ஆதலால் எல்லாப் பொய் வழிகளையும் வெறுக்கிறேன் (சங் 119: 103, 104).

## Form IV

### Statement about ownership and other particulars about Newspaper

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Madurai |
| 2. | Periodicity of its Publication | : | Monthly |
| 3. | Printers Name | : | N. Jayakarthikeyan |
| | Nationality | : | Indian |
| | Address | : | Thee Classic Printers<br>27, Kakathope Street<br>Madurai - 625 001 |
| 4. | Publisher's Name | : | P.C. Philemon Rajah |
| | Nationality | : | Indian |
| | Address | : | 45 C/1, Church Lane, Coronation St.,<br>Arasaradi, Madurai - 625 016 |
| 5. | Editor's Name | : | P.C. Philemon Rajah |
| | Nationality | : | Indian |
| | Address | : | 45 C/1, Church Lane, Coronation St.,<br>Arasaradi, Madurai - 625 016 |

I, P.C. Philemon Rajah, hereby declare that the particular given above are true to the best of my knowledge and belief.

Date : 11-04-2014

P.C. Philemon Rajah
Publisher & Editor

# 1 சத்திய வசனத்தை நிதானமாய் பகுப்பது

**முகவுரை:**

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயு என்கிற ஒரு வாலிப கிறிஸ்தவ பிரசங்கியாருக்கு சொன்னது : "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரகையாயிரு" (2 தீமோத்தேயு 2:15). "சத்திய வசனம்'' என்பது ''பைபிள்'' என்னும் கிறிஸ்தவ வேதாகமம் (யோவான்17:17). சரியாக உபயோகப்படுத்தினால் இந்த வசனம் பூமியிலிருந்து பரலோகத்துக்கு வழி காட்டும். தவறாக உபயோகப்படுத்தினால் ''சத்திய வசனத்தை'' புரட்டி, நம்மை நாமே கெடுத்துக்கொள்ளுவோம்.

**I வேதாகமம் தேவனுடைய சிறந்த நூல் நிலையம்.**

✧ வேதாகமத்தில் மொத்தம் 66 புத்தகங்கள் இருக்கின்றன.

✧ அதில் முதல் பெரும் பகுதி **பழைய ஏற்பாடு.**

1. இந்த பழைய ஏற்பாட்டில் 39 தனிப்பட்ட புத்தகங்கள் இருக்கின்றன.

2. இந்த பழைய ஏற்பாட்டில் விளக்கமாகத் தெரிகிற இரண்டு காலப்பகுதிகளைப் பார்க்கிறோம்.

அ. ஆதியாகமம் 1 :1 –லிருந்து யாத்திராகமம் 20 – ஆம் அதிகாரம் மட்டும், கடவுள் குடும்பத்தலைவர்களுடன் தனிப்பட்ட முறையாகவும் குடும்பமாகவும் காரியங்களை நடத்தினார். கடவுள் தகப்பன்மார்கள் மூலமாக பேசினதால் இது பிதாக்களின் காலம் என்று சொல்லப்படுகிறது, (ஒப்பிடுக அப்போஸ்தலர் 7 : 11; 13 :17).

ஆ. யாத்திராகமம் 2 – ஆம் அதிகாரத்திலிருந்து மல்கியா மட்டும் ( உண்மையில் சொல்லப் போனால், அப்போஸ்தவர் 2 – ஆம் அதிகாரம் மட்டும் என்று சொல்லலாம்), தேவன் இஸ்ரவேல் தேசத்தாரோடு ஒரு தேசமாக தமது காரியங்களை நடத்தினார். இது நியாயப்பிர மாணத்தின் காலம் என்று சொல்லப்படுகிறது, (கலாத்தியர் 4:5).

3. சுமார் 32 ஆசிரியர்கள் பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு பழைய ஏற்பாட்டின் வசனங்களை எழுதினார்கள்.

அ. ஒரு சில வேத ஆராச்சியாளர்கள் யோபின்

புத்தகமே எல்லாவற்றிலும் பழமையானதென்று நினைத்திருந்தாலும், வேறு ஆராய்ச்சியாளர்கள் மோசே எழுதின புத்தகங்களே எல்லாவற்றிலும் பழமையென்று நினைக்கிறார்கள்.

ஆ. எப்படியிருப்பினும், பழைய ஏற்பாட்டை எழுதி முடிக்க 1,000 ஆண்டுகள் பிடித்தது.

இ. பழைய ஏற்பாட்டின் கடைசி புத்தகம் எனும் மல்கியா கிறிஸ்துவுக்கு முன் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் எழுதி முடிக்கப்பட்டது.

✧ வேதத்தில் இரண்டாவது பெரும் பகுதி புதிய ஏற்பாடு.

1. புதிய ஏற்பாட்டின் புத்தகங்களில் முதல் நான்கு புத்தகங்களும், அப்போஸ்தலர் 2 - ம் அதிகாரம் வரைக்கும் நியாயப்பிரமான காலம் அல்லது இஸ்ரவேலின் பகுதியாக இருக்கிறது.

அ. முதல் நான்கு புத்தகங்களில் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைப் பற்றியும் வரப்போகிற புதிய உடன்படிக்கையின் உபதேசங்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

ஆ. இயேசு சொன்ன உபதேசம் இந்த புத்தகங்களில் நேரடியாக சொல்லப்பட்டாலும், அப்போஸ்தவர் 2 - ம் அதிகாரத்தில் மட்டும் அந்த பெந்தெகோஸ்தே நாளில் தான் புதிய உடன் படிக்கையின் காரியங்கள் அமுலாக்கப்பட்டுள்ளது.

2. அப்போஸ்தவர் 2-ம் அதிகாரம் தொடங்கி மற்ற புத்தகங்களும் புதிய ஏற்பாட்டின் காலத்தை விவரிக்கிறது.

3. மொத்தம் 8 ஆசிரியர்கள் புதிய ஏற்பாட்டின் புத்தகங்களில் பரிசுத்த ஆவியானவர் கொடுத்த வார்த்தைகளை எழுதினார்கள்.

அ. இதற்கு சுமார் 40 முதல் 60 வருஷங்கள் பிடித்தது.

ஆ. இந்த 27 புத்தகங்கள், அப்போஸ்தலரின் உபதேசம் என்று சொல்லப்படுகிறது.

## II. பழைய ஏற்பாட்டை ஐந்து பாகங்களாகப் பிரிக்கலாம்.

✧ பழைய ஏற்பாட்டின் முதல் பாகம் **நியாயப்பிரமாணம்**.

1. அதில் 5 புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன:

(a) ஆதியாகமம் (d) எண்ணாகமம்

(b) யாத்திராகமம் (e) உபாகமம்

(c) லேவியராகமம்

2. ஆதியாமம் 1 : 1 - லிருந்து யாத்திராகமம் 20 வரையில் கடவுள் தமது சித்தத்தை தனிப்பட்ட ஆட்களுக்கும்

குடும்பங்களுக்கும் வெளிப்படுத்தினர். குடும்பத்தலைவர்களின் மூலம் நடத்திக் கொண்டதற்காக இது பிதாக்களின் காலம் என்று சொல்லப்படுகிறது

அ. குடும்பங்களில் ஆண் தலைவர்கள், அவரவர் குடும்பத்துக்கு ஓர் ஆசிரியன் போல் பணியாற்றினார்கள்.

ஆ. சுமார் 2500 வருஷங்களாக இப்படி நடந்தது. இந்த காலத்தில் கடவுள் ஒரு மதமாக யாதொரு ஒழுங்கோ, அமைப்போ, சட்ட முறைகளோ ஏற்படுத்த வில்லை. சில சட்டங்களோடும் மனசாட்சியோடும் வாழ்ந்தார்கள்.

3. யாத்திராகமம் 20 லிருந்து அரேபியாவிலுள்ள சீனாய் மலையில் நியாயப்பிரமாணத்தின் காலம் இஸ்ரவேலர்களோடு ஆரம்பித்தது. இஸ்ரவேலர்கள் இப்பொழுது யூதர்களாக சொல்லப்படுகிறார்கள்.

4. மற்ற எல்லா பழைய ஏற்பாட்டு புஸ்தகங்கள் நியாயப்பிரமாண காலத்தில் அடங்கியிருக்கிறது.

✧ பழைய ஏற்பாட்டின் புஸ்தகங்களில் இரண்டாவது பாகம் சரித்திரம்.

1. அதில் 12 புஸ்தகங்கள் அடங்கியிருக்கின்றன :

அ. யோசுவா (g) 2 இராஜாக்கள்

(b) நியாயாதிபதிகள் (h) 1 நாளாகமம்

(c) ரூத் (i) 2 நாளாகமம்

(d) 1 சாமுவேல் (j) எஸ்றா

(e) 2 சாமுவேல் (k) நெகேமியா

(f) 1 இராஜாக்கள் (l) எஸ்தர்

2. இந்த சரித்திர பாகம், கால வரிசையாக எழுதப்பட்டிருக்கிறது.

3. கடவுள் இஸ்ரவேலர்களை கானான் தேசத்துக்குள் கொண்டு வந்ததிலிருந்து, சுமார் கி.மு. 400 வரைக்கும் இஸ்ரவேலின் வரலாறு விவரிக்கப்பட்டுள்ளது.

✧ பழைய ஏற்பாட்டின் புத்தகங்களில் மூன்றாவது பாகம் **இலக்கியம்**.

1. இதில் 5 புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன :

(a) யோபு (b) சங்கீதம்

(c) நீதிமொழிகள் (d) பிரசங்கி

(e) உன்னதப்பாட்டு

2. மற்ற புஸ்தகங்களுக்கு சம்மந்தமாக இந்த பாகத்தில் இங்கும் அங்கும் சிறிய அளவுக்கு, நியாயப்பிரமாணப் சரித்திரம், தீர்க்கதரிசனம் போன்றவை கலந்திருக்கிறது.

3. இருந்தாலும் இவைகள் அதிகமாக இலக்கியமாய் இருக்கிறது.

அ. இந்த புத்தகங்கள்

வாழ்க்கையின் முறைகளை இலக்கிய அழகோடும், ஆழ்ந்த கருத்தோடும் சொல் வன்மையோடும் விளங்குகிறது.

ஆ. அவைகள் நித்தயமான சத்தியங்களோடு எல்லாதேசத்தார்களுக்காகவும் ஆறுதலையும் உற்சாகதையும், புத்திமதிகளையும் கொண்டு வருகிறது.

✧ பழைய ஏற்பாட்டின் புஸ்தகங்களில் நான்காவது பாகம், **பெரிய தீர்க்க தரிசன புத்தகங்கள்.**

1. இதில் 5 புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன:

(a) ஏசாயா (b) எரேமியா

(c) புலம்பல் (d) எசேக்கியேல்

(e) தானியேல்

2. இவைகள் நீண்ட புஸ்தகங்களாக இருக்கிறபடியால் வேத ஆராய்ச்சியாளர்கள் "பெரிய தீர்க்க தரிசிகள்" என்பார்கள்.

அ. இதற்காக மற்ற தீர்க்க தரிசனங்களை விட இவைகள் முக்கியமானவைகள் என்பது அர்த்தமல்ல

ஆ. நீண்ட தீர்க்க தரிசனங்களாக இருக்கிறபடியால் இவைகள் அதிமாக மேசியாவின் காரியங்களை முன் கூறுகிறது.

✧ பழைய ஏற்பாட்டின் புஸ்தகங்களில் ஐந்தாவது பாகம் சிறிய **தீர்க்க தரிசன புத்தகங்கள்.**

1. இதில் 12 புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன:

(a) ஓசியா (g) நாகூம்

(b) யோவேல் (h) ஆபகூக்

(c) ஆமோஸ் (i) செப்பனியா

(d) ஒபதியா (j) ஆகாய்

(e) யோனா (k) சகரியா

(f) மீகா (l) மல்கியா

2. இந்த சிறிய தீர்க்க தரிசனங்கள் அமத்சியா அல்லது, யோவாஸ் என்கிற இராஜாக்களின் காலத்தில் சுமார் கி.மு. 850 தொடங்கி, நெகேமியாவின் காலத்தில் சுமார் கி.மு. 400 வரைக்கும், இந்த தீர்க்க தரிசிகள் வெவ்வேறு குழப்பங்களைக் குறித்து தீர்க்கதரிசனமாக இஸ்ரவேல் மக்களை எச்சரித்தார்கள்

**III. புதிய ஏற்பாட்டின் புஸ்தகங்களை ஐந்து பாகங்களாகப் பிரிக்கலாம்.**

✧ புதிய ஏற்பாட்டின் முதல் பாகம் **"சுவிசேஷ புத்தகங்கள்"** என்று சொல்லப்படுகிறது. இது இயேசுவின் ஊழியத்தின் காலம்.

1. இதில் 4 புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன:

(a) மத்தேயு, (b) மாற்கு, (c) லூக்கா, (d) யோவான்

2. இந்த புத்தகங்களின் நோக்கம்: இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று நிரூபிப்பதே.

✧ புதிய ஏற்பாட்டின் புஸ்தகங்களின் இரண்டாவது பாகம் **சரித்திரம்.**

1. இதில் ஒரே புத்தகமிருக்கிறது :அப்போஸ்தலருடைய நடபடிகள்.

2. இது எல்லா அப்போஸ்தலருடைய எல்லா செயல்களையும் கட்டிக்காட்டவில்லை.

3. கிறிஸ்துவின் சபை எப்படி வளர்ந்தது என்பதை விளக்கும்படி சில முக்கியமான நிகழ்ச்சிகள் மட்டும் எழுதப்பட்டிருக்கிறது.

அ. அப்போஸ்தலர்களின் சாட்சியம் சபையின் ஆரம்பமும் தொடங்கி, 12-ஆம் அதிகாரம் வரைக்கும் எருசலேமிலும் யூதேயாவிலும் சுவிசேஷத்தினால் சபையின் முன்னேற்றம் எழுதப்பட்டிருக்கிறது.

ஆ. சபையின் ஆரம்பத்தோடு புதிய ஏற்பாட்டின் அல்லது கிறிஸ்தவ காலம் தொடங்குகிறது.

இ. 13 ஆம் அதிகாரத்திலிருந்து 28 – ஆம் அதிகாரம் வரைக்கும் அப்போஸ்தலனாகிய பவுலின் சுவிசேஷ சேவையின் மூலமாக சபை வெளி நாடுகளில் வளர்ந்த விவரம் சொல்லப்பட்டிருக்கிறது.

✧ புதிய ஏற்பாட்டின் மூன்றாவது பாகம் **பவுலின் நிருபங்கள்**:

1. இதில் 14 புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன:

(a) ரோமர் (h) 1தெசலோனிக்கேயர்

(b) 1 கொரிந்தியர்

(i) 2 தெசலோனிக்கேயர்

(c) 2 கொரிந்தியர் (j) 1 தீமோத்தேயு

(d) கலாத்தியர் (k) 2 தீமோத்தேயு

(e) எபேசியர் (l) தீத்து

(f) பிலிப்பியர் (m) பிலேமோன்

(g) கொலோசெயர் (n) எபிரெயர்

2. பவுல் அப்போஸ்தலன் இந்த 14 புத்தகங்களையும் எழுதினார் என்று சொல்லப்படுகிறது.

அ. ஒரு சில வேத ஆராய்ச்சியாளர்கள் எபிரெய நிருபத்தை எழுதின ஆசிரியரைப் பற்றி சந்தேகிக்கிறார்கள்.

ஆ. அப்போஸ்தலனாகிய பவுல் தான் எபிரெயர் புத்தகத்தை எழுதினார் என்று அநேகர் ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல, இந்த புத்தகம் ஆவியானவரால் ஏவப்பட்ட தேவ வசனமாய் இருக்கிறது என்று எல்லா

பழங்காலத்தின் எழுத்தாளர்களும் கூறினார்கள்.

3. இந்த 14 புத்தகங்களின் நோக்கம் : சபைக்குள் இருக்கிற கிறிஸ்தவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், என்னென்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்குப் போதிக்கப்படுகிறது.

✧ புதிய ஏற்பாட்டின் நான்காவது பாகம் **பொது நிருபங்கள்.**

1. இந்த பாகத்தில் 7 புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன.

(a) யாக்கோபு (e) 2 யோவான்

(b) 1 பேதுரு (f) 3 யோவான்

(c) 2 பேதுரு (g) யூதா

(d) 1 யோவான்

2. இந்த புத்தகங்களின் தலைப்புகள், எழுத்தாளரின் பேரைச் சுட்டிக் காட்டுகிறது.

3. இந்த புத்தகங்களின் நோக்கம் : சபையார் எப்படி கிறிஸ்தவ வாழ்க்கையை துன்பங்களில் நடத்த வேண்டும்.

✧ புதிய ஏற்பாட்டின் ஐந்தாவது பாகம் தீர்க்க தரிசனம்.

1. இதில் ஒரே ஒரு புத்தகம் அடங்கியிருக்கிறது.

2. இதை யோவான் அப்போஸ்தலன் பத்மூ தீவில் எழுதினார்.

3. தரிசனத்தில் முதல் மூன்று அதிகாரங்களும் அப்போது இருந்த ஆசியாவின் ஏழு சபைகளைப் பற்றியவை.


அ. ''ஆசியா'' என்றால் வெளிப்படுத்தின புத்தகத்தில் சின்ன ஆசியாவைக் குறிக்கும். அதாவது துருக்கி தேசம்.

ஆ. ''ஆசியாவில்'' இருந்த பட்டணங்களில் சில தற்கால துருக்கியில் மறைந்து போனது, எல்லாம் மாறிப் போனது.

4. மீதியான 19 அதிகாரங்களில், கி.பி. 80-85-லிருந்து, அதாவது புத்தகம் எழுதப்பட்டதிலிருந்து, அநேகமாய் சபையின் வரப் போகிற துன்பங்களைப் பற்றி முன் குறித்தது.

அ. அனேக காரியங்கள் கவிதையாக எழுதினபடியால் புரிந்து கொள்வது கடினமாயிருக்கிறது, இருந்தாலும் கிறிஸ்தவர்கள் ரோம சாம்ராஜயத்தின் ராயனை ஆண்டவராக வணங்கக் கூடாது என்கிற செய்தி தெளிவாக இருக்கிறது, வெளி. 13 : 4- 8

ஆ. இரகசியமான தரிசனங்களில் சில மாத்திரம் இன்னும் நிறைவேற்றப்பட வேண்டும்.



ஒருவர் தேவனிடம்
ஜெபத்தினால்
தொடர்பை இழக்கும்போது
அவரிடமிருந்து பிரிந்து
செல்லக் கூடும்.

# 19 எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? (1 கொரி : 12:30)

(தொடர்ச்சி)

பிரியமான வாசகர்களே!

1 கொரிந்தியர் 12:30 ல் பவுல் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கும் பதிலாக கடந்த இதழ்களில் கற்றுவருகிறோம். 1கொரி 12:14 அதிகாரங்களில் அந்நிய பாஷை வரத்தைக் குறித்து, ஆவிக்குரிய வரங்களில் ஒன்றாக இருந்தாலும் அத்துடன் மற்றொருவரம் தெளிவாகக் காட்டப்பட வேண்டும் என்று கற்றுக்கொண்டோம். குறிப்பாக அப்.2-ல் அந்நிய பாஷையில் தேவனுடைய மகத்துவம் தெளிவாக்கப்பட்டது (அப் 2:14.) அடுத்து அந்நிய பாஷையில் தேவனை புகழுவது தெளிவாக்கப்பட்டது (அப்.10:45). பிறகு அந்நிய பாஷையில் தீர்க்கதரிசனம் சொன்னார்கள் என்பது தெளிவாயிற்று (அப் 19:6).

1கொரிந்தியர் 12 ல் - அந்நிய பாஷை வரம் கடைசி வரம் (முதன்மையானதல்ல) என்றும், அது அவரவர் சுயபிரயோஜனத்துக்கென்று திருமறைக்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டதென்றும், வரங்களைப் பெற்று பிரிவினைகளை வெளிப்படுத்துவதைப் பார்க்கிலும் ஒற்றுமையுடன் கர்த்தருடைய சரீரமாகிய சபையை பக்திவிருத்தி செய்வது அவசியம் என்றும் வலியுறுத்தி கூறினார். எனவே அந்நிய பாஷைகளைக் காட்டிலும் மேலான வரமாகிய அன்பை நாடும்படியும் கூறப்பட்டது. 1 கொரிந்தியர் அதி 13-ல் நிறைவாகிய திருமறை வரும்போது, ஒழிந்துபோகும் அந்நிய பாஷை, தீர்க்கதரிசனம் இவைகளால் வரும் அறிவு ஆகியவைகளைக் காட்டிலும் அன்பு நிலைத்திருக்கும் என்பதை பவுல் வலியுறுத்துகிறார். தொடர்ந்து 1 கொரிந்தியர் 16-ம் அதிகாரத்தில் அந்நிய பாஷையைக் காட்டிலும் தீர்க்கதரிசன வரமே மேன்மையானது என்று விவரிக்கிறார்.

1 கொரி 14:1-5 ல், நாட வேண்டிய முக்கியமான வரங்கள் (வச. 1,2) 1. அன்பு 2. ஞானவரங்கள். 3. விசேஷமாக தீர்க்கதரிசன வரம். இதில் அன்பு எல்லா வரங்களுக்கும் மேலானது என்று அதிகாரம் 13ல் காட்டிய பவுல், ஞானவரத்தையும் நாடச்சொல்கிறார். ஞானம் கர்த்தருக்குப் பயப்படுதலின் ஆரம்பம் (நீதி 1:7). எனவே கர்த்தருக்குப் பயப்பட வைத்து போதிக்கத்தக்க வகையில் ஞான வரத்தை நாட வேண்டும் என்றார். அது ஞானத்தைப் போதிக்கும் வசனம் (1கொரி 12:8). அதே போல இங்கே குறிப்பிடப்படுகிற தீர்க்கதரிசன வரம் என்பது, ஏதோ முன்னுரைத்தலை (Fore-Telling) ஏவுதலால் சொல்லும் வரத்தை பவுல் குறிப்பிடவில்லை. மாறாக, வசன

ஆதாரங்களோடு முக்கால நிகழ்வுகளை பிரசங்கிக்கும் வசன அறிவையே வலியுறுத்துகிறார் (1கொரி 15:22-27).


இவற்றின் நோக்கம் முற்றிலும், சபையின் பக்தி விருத்திக்காக செய்யப்பட வேண்டும் (1 கொரி 14:3,12,15-17,24,25). மேலும் வச.4ல் ''தனக்கே பக்தி விருத்தியுண்டாகத் தக்கதாக'' அந்நிய பாஷையில் பேசுவதை பவுல் குறிப்பிட்டார். ஆக பாஷைகளில் பேசுவது இரண்டு வகை பக்தி விருத்தியை அன்று உண்டாக்கும்படி பேச வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

**1. சபை :** பக்தி விருத்தி உண்டாக்கப்பட வேண்டுமானால் அந்நிய பாஷை மூலம் தீர்க்க தரிசனம் உரைத்து வசனத்தை போதித்து, பக்தி விருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகச் செய்ய வேண்டும் (1கொரிந்தியர் 14:3).

ஆதிகால முதல் மறைவாக இருந்த இரட்சிப்பைக் குறித்த இரகசியங்களை (எபேசியர் 3:9-11) வெளிப்படுத்தவோ, தேவனைக் குறித்த அறிவை உண்டாக்கவோ, தீர்க்க தரிசனத்தை உரைத்துப் போதிக்கவோ ஏதுவான வைகளைச் சொல்லாமல் பேசப்படும் அந்நிய பாஷையினால் பிரயோஜனமில்லை (1 கொரி. 14:6), தெளிவான அர்த்தங் கொடுக்கப்படாமல் பேசப்படும் அந்நிய பாஷைகளில் பேசுவதால், பக்தி விருத்தி உண்டாகாது. தெளிவான மொழி அல்லது அர்த்தஞ் சொல்லுவோரைக் கொண்டு பேசும் அந்நிய பாஷையே அவசியமானது (1கொரி. 14:7-16).

அர்த்தம் புரியாமல் பேசப்படும் பதினாயிரம் வார்த்தைகளைக் காட்டிலும், தெளிவான புரிந்து கொள்ளுதவோடு கூறப்படும் ஐந்து வார்த்தைகளே மேலானது (1 கொரி. 14:17-19).

அந்நிய பாஷையில் பேசுவது அவிசுவாசிகளை மனந்திரும்பச் செய்ய வேண்டும். ஆனால் தெளிவற்ற வார்த்தைகளால் பிரயோஜனம் ஒன்றுமில்லை (1 கொரி. 14:20-25). எனவே சபை பக்தி விருத்தியை மனதில் கொள்ளப்படாமல் அந்நிய பாஷையை பேசுவதால் தேவனுடைய உண்மையான திட்டம் முறியடிக்கப்படுகிறது, (எபேசியர் 4:12-13). தேவனுடைய உண்மையான திட்டம் என்ன? அப்போஸ்தலர்களையும், தீர்க்க தரிசிகளையும் கொண்டு, பரிசுத்த ஆவியினால் பேசப்பட்டதன் நோக்கம் என்ன? “பரிசுத்தவான்கள் சீர் பொருந்த வேண்டும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்தி விருத்தியடைய வேண்டும்.”



**வாக்களிப்பது நம் கடமை வாக்களிப்பதை தவறவிடாதீர்.**

**நல்ல மத்திய அரசு அமைய ஜெபத்துடன் வாக்களிப்போம் !**

**2.தனக்குத் தான்**: பக்திவிருத்தியடைதல்

இதினால் அர்த்தஞ் சொல்லுகிறவன் இல்லாத பட்சத்தில், தனக்கும் தேவனுக்கும் தெரிய (இருதயத்தில்) அவன் உணர்த்தப்படும்போது பேச வேண்டும் (1 கொரி. 14:27,28). அர்த்தஞ் சொல்லுகிறவன் இல்லாத பட்சத்தில் அவன் சபையிலே அந்நிய பாஷை பேசக்கூடாது. வரங்கள் கொடுக்கப்பட்டு வந்த அன்றே, இப்படிப்பட்ட கண்டிப்புகள் இருந்திருக்குமானால், இன்று அவைகள் ஒழிந்து போன பிறகு, எவ்வளவு கண்டிப்புடன் போதிக்கப்பட வேண்டும்? கண்டதையும் குழப்பிவிட்டு இன்று தேவதூதருடைய பாஷையை பேசுவதாகவும், தேவனிடத்தில் பேசுவதாகவும், 'சபையிலே" பேசுவதாக சொல்வது வசனத்துக்குப் புறம்பானது (வச.28).

சபை கூடுவது எந்த ஒரு சுய நலமும் அற்றதாக இருக்க வேண்டும். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்க வேண்டும். "பிறனுடைய பக்தி விருத்திக் கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்கு பிரியமாய் நடக்கக்கடவன்" (ரோமர் 15:2)

அந்நிய பாஷையிலே மிக அதிகமான வெளிப்பாடு பெறுவதாகவும், தான் பேசுவதாகவும் ஒருவர் சொன்னார். "கடந்த ஞாயிற்றுக்கிழமை என்ன பாஷையிலே பேசினீர்கள்?'' என்று கேட்டேன். தனக்குத் தெரியவில்லை என்றும், தன்னோடு இருந்தவரைப் பார்த்து தான் என்ன மொழியில் பேசினார் என்று சொல்லும்படி பணித்தார். கூட இருந்தவர் "அவர் ஜெர்மன் மொழியில் பேசினார்'' என்றார். பிறகு அவரே திருத்திக் கொண்டு "இல்லை, இல்லை ! அவர் நார்வே மொழியில் பேசினார்" என்றார். "உங்களுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணும் வரம் இருக்கிறதா?'' என்று கேட்டேன். ''இல்லை'' என்றார். ''ஜெர்மன் மொழியோ, நார்வே மொழியோ உங்களுக்குத் தெரியுமா?" என்றேன். தெரியாது" என்றார். "பிறகு எப்படி, அவர் இந்த மொழியில் பேசினார்'' என்று சொல்லுகிறீர்கள்'' என்று கேட்டேன். பதில் தெரியவில்லை.

தான் பேசுவது தனக்கும் தெரியாது. தான் பேசுவது சபையாருக்கும் தெரியாது. தான் பேசும் மொழியையுடையவர் யாரும் அக்கூட்டத்தில் இல்லை. இப்படி யாருக்கும் தெரியாத பாஷையை, ஒருவரைக் கொண்டு பேசுவது தான் தேவனுடைய வெளிப்பாடா? கற்பனைக்கு வேத வசனம் இடமளிக்கிறதா? குழப்ப வாதிகள் திருந்துவார்களா? "தேவன் கலகத்துக்கு தேவனாயிராமல், சமாதானத்துக்கே தேவனாயிருக்கிறார்." (1கொரி. 14:33).

எல்லாரும் அந்நிய பாஷைகளை பேசுகிறார்களா? இல்லை! இன்று ஒருவருமில்லை!

– தொடரும்

**இ.ஏ. ஆறுமுகம்** (போதகர்)
திண்டுக்கல்.

# வாலிபர்களுக்கான மூப்பர்களின் பொறுப்பு

## An Elder's Responsibility to youth

வாலிபர்களை கர்த்தருக்கேற்ற வாழ்க்கைக்கு உருவாக்குவதில் சபையின் மூப்பர்களுக்கும், முதிர்ச்சி அடைந்த விசுவாசிகளுக்கும் அதிக பொறுப்பு உண்டு. நம்முடைய சபையின் அம்மாக்களுக்கும் அப்பாக்களுக்கும், தேவதிட்டத்தை எவ்வாறு வாலிபர்களுக்கு கற்றுத் தருவது என்ற விஷயத்தில், நாம் உதவ வேண்டும்.

நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும் படுத்துக்கொள்கிறபோதும் எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி (உபாகமம் 6:7)

**உங்கள் வாலிபர்களை சபையின் வேலைகளில் ஈடுபடுத்துங்கள்.**

வயதில் மூத்தவர்கள், சபையின் செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு வாலிபர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டியது அவசியம். அவர்கள் சபையின் சில தொழுகைகளை நடத்தவும் அதை சார்ந்த நிகழ்வுகளிலும் ஈடுபடுத்தப்பட வேண்டும். சில சிறப்புக் கூட்டங்களை ஒழுங்கு செய்வதில் மற்றவர்களுடன் சேர்ந்து திட்டமிடவும் செயல்படுத்தவும் வாலிபர்களும் பயன்படுத்தப்பட வேண்டும். சில விஷயங்களில் வாலிபர்களுடைய கருத்தை நாம் அவசியம் கேட்க வேண்டும். அது அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை நல்லவிஷயத்தில் பாதிக்கும்; அதாவது நாம் நம்முடைய வாலிய பிள்ளைகள் வளரவும், முதிர்ச்சியடையவும் தேவையான இடம் கொடுக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் கிறிஸ்துவுக்குள் முழுமையடைவார்கள்.

சபையிலே, வாலிபர்கள் மூலமாக என்ன ஒரு அருமையான ஆதாரங்களை ஆண்டவர் நமக்கு அருளியுள்ளார். அநேக நேரங்களில் சபையில் வாலிபர்களுக்குள் கிடக்கும் விலைமதிப்பற்ற அவிக்குரிய புதையல்கள் தோண்டப்பட்டு வெளியே எடுக்கப்படுவதேயில்லை. அநேக நேரங்களில் அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஆனாலும் அவர்கள் மிகவும் திறமையானவர்களும், ஆண்டவருக்கு வேலை செய்ய ஆர்வமுள்ளவர்களுமான உள்ளனர்.

**வாலிபர்களின் தேவைகளை சந்தியுங்கள் :**

சில நேரங்களில் நாம், நம்முடைய

வாலிப பிள்ளைகளின் உலகத்திற்குரிய தேவைகளையும் சந்திக்க வேண்டும். ஆவிக்குரிய காரியங்களில் அவர்கள் ஈடுபட உண்மையிலேயே செலவினங்களுக்காக கடினப்படும்போது, நாம் அவர்களுக்கு உதவலாம். ஆண்டுக்கு இருமுறையாவது அவர்களுக்கென விஷேச வாலிபர் வேதாகம முகாம்களை நடத்திக் கொடுக்கலாம்.

மேலும் வாலிபர்கள் எங்கு தேடினாலும், அவர்களுடன் இருப்பவர்களாக சபை என்னும் குடும்பம் இருக்க வேண்டும். அதற்காக நாம் அவர்களின் நெருங்கிய நண்பரைப் போல அவர்களுடனேயே இருக்க வேண்டும். சபையின் வாலிபர்கள் தீய நண்பர்களை தேர்ந்தெடுப்பது அந்த நண்பன் தீமையை விரும்புவதினால் அல்ல; மாறாக, அவர்களுடனேயே எப்போதும் இருப்பதினால்தான் அப்படி செய்கின்றனர். ஒரு மேய்ப்பன் தான் வெகு தூரத்தில் அமர்ந்துகொண்டு, தன் மந்தையை நேர்த்தியாய் மேய்க்க முடியாது. அவன் எப்பொழுதும் மந்தையுடனேயே இருக்க வேண்டும்.

வாலிப பிள்ளைகளோடே ஜாலியாக, அன்பாக, விளையாட்டுத்தனமாக ப்ரெண்ட்லியாக இருப்பது நல்லது தான். அதே நேரத்தில் அவர்களை உருவாக்க வேண்டியதும் அவசியம்." ஆகையால் உங்களைக்குறித்தும் தேவன் தம்முடைய சுயரத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள் (அப் 20:28).

மூப்பர்கள் மற்றும் முதிர்ந்த விசுவாசிகளாகிய நாம், நம்முடைய வாலிய பிள்ளைகளை பயிற்றுவித்து கிறிஸ்துவுக்குள் வளரச்செய்ய, எவ்வளவுக்கு அதிகமான நபர்களை எவ்விதத்தில் எல்லாம் பயன்படுத்த முடியமோ அதை செய்ய வேண்டும்; ஆனால் அவர்களுடைய ஆவிக்குரிய நலனின் முழு பொறுப்பும் நம்முடன் உள்ளது என நாம் மறந்துவிட கூடாது.

**மார்ச் மாதம் சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்**

1. J. வினித்தா சென் – சேலம்
2. D. ஜீனித்தா டேஃப்னி – சென்னை
3. P. சௌந்தர் – திருமங்கலம்
4. S. பேலிக்ஸ் – திருச்சி
5. I. ஷீபா பிரியதர்ஷிணி – சிவகங்கை
6. M. அரவிந்த் – கோவை
7. G. ஜெபா ரிச்சர்டு – பொள்ளாச்சி
8. கௌசந் – திருப்பூர்

**சென்ற மாதம் விடுப்பட்டவர்கள்**

1. K. மோகன் – நாமக்கல்
2. D. டேஃனி – சென்னை
3. D. ஜீனித்தா – சென்னை
4. R. பால் ராஜ் – சென்னை
5. R. சரோஜா – தென்கலம்
6. Mrs. ஞான சுந்தரி – கோவை
7. கேத்தரின் அருள் நேசம் – மதுரை
8. M. புஷ்பராணி – நாமக்கல்
9. R. காட்சன் ஆசீர் – திருச்சி
10. R. சாமுவேல் R. மெர்சி – சென்னை
11. A. ரோஸ் மேரி – சென்னை

# வேதாகமத்தில் நான் யார்?

1. நானும் என் தாதிமாறும் 3 நாட்கள் உபவாசம் இருந்து என் உயிரை மதியாமல் ராஜாவின் சமூகத்தில் போய் நின்றேன். நான் யார்?
2. என் கணவனை இழந்த பின்னும் என் வாழ்நாளை என் மாமியாருடன் கழித்தேன். நான் யார்?
3. தேவனை தூஷிக்கும் படி என் கணவனை ஏவினேன். நான் யார்?
4. நான் தூதர்களின் பாதுகாப்பிலிருக்கும் போது அவர்கள் பேச்சை மீறி திரும்பி பார்த்தேன். நான் யார்?
5. என் கணவனை ஆண்டவனே என்று அழைத்து பெண்களுக்கு மாதிரியாய் வாழ்ந்தேன். நான் யார்?
6. ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள். நான் யார்?
7. வந்தவர் யாரென்றே தெரியாத நிலையிலும் அவருக்கும், அவருடைய ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்த்தேன். நான் யார்?
8. என்னை என் கணவருக்கும் பிடிக்கும் எனக்காக அவர் 7 வருடம் என் வீட்டில் வேலை செய்தார். நான் யார்?
9. என் குழந்தை பால்குடி மறந்தவுடனே தேவாலயத்தில் விட்டு விட்டேன். நான் யார்?
10. சாலமோனின் ஞானத்தை பரிசோதிக்க வந்த ஸ்திரி. நான் யார்?
11. என் தந்தையின் பொருத்தனையால் நான் பலியிட வேண்டியவளானேன். நான் யார்?
12. ஸ்திரிகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்று புகழப்பட்டவள். நான் யார்?
13. இயேசுவுக்காக வழியை ஆயத்தம் பண்ணியவரை என் வயிற்றில் சுமந்தேன். நான் யார்?
14. இயேசுவின் பாதத்தில் பரிமளதைலம் ஊற்றிய. நான் யார்?
15. நானும் என் தாயும் என் மகனை விசுவாசத்தில் வளர்த்தோம். நாங்கள் யார்?

வாலிபரே! இவைகளை கண்டுபிடித்து உடனே எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.
உங்கள் வயதை குறிப்பிடுங்கள். வயது வரவும் 12 முதல் 30 வரை. சிறப்பு பரிசு உண்டு.

**வாலிபரே! வேத ஆராய்ச்சி உங்கள் வாழ்வை வளமாக்கும்**

**- சகோதரி. பெவர்லி லிடியா**

# 1 பேரரசர் சாலமோன்

Dear குட்டீஸ் எப்படி இருக்கிங்க? நீங்கள் அனைவரும் நன்றாக Exam எழுதி இருப்பிங்கனு நினைக்கிறேன். இன்று நாம் பேரரசர் சாலமோனைப் பற்றி தெரிந்துகொள்வோமா!

யார் இந்த சாலமோன்? இவர் தாவீது ராஜாவின் மகன். இவர் தாய் பெயர் பத்சேபாள். தாவீதுக்கு பிறகு இஸ்ரவேலர்களை ஆளும்படி தேவன் சாலமோனை ராஜாவாக்கினார். சாலமோனும் தன் அப்பா தாவீதை போல பரலோக கடவுளை மிகவும் அதிகமாக சிநேகித்தார்.

ஒருநாள் இரவு சாலமோனுடைய கனவில் கடவுள் வந்து, உனக்கு என்ன வேண்டும் கேள் என்றார். உங்களிடம் கடவுள் இப்படி கேட்டிருந்தால், என்ன கேட்டிருப்பீர்கள்? சாலமோன் என்ன கேட்டாலும் கிடைத்திருக்கும் அல்லவா?

ஆனால் சாலமோன் கடவுளிடம், நான் உமது மக்களை நியாயமாக வழிநடத்த எனக்கு ஞானம் வேண்டும் என்றும் கேட்டார். கடவுள் சாலமோனுக்கு ஞானத்தை கொடுத்து எல்லாரைப் பார்க்கிலும் சிறந்த ஞானியாக்கினார். மேலும், சாலமோன் கேட்காத ஐசுவரியத்தையும் புகழையும் கொடுத்தார்.

இந்த ஆசீர்வாதம் மட்டுமல்ல குட்டீஸ், கடவுள் அவருடைய ஆலயத்தை கட்டக்கூடிய மிகப்பெரிய யாவருக்கும் கிடைக்காத பாக்கியத்தை சாலமோன் ராஜாவிற்கு கொடுத்தார். சாலமோன் இஸ்ரவேலரை அரசாண்ட 40 வருஷமும் தேசம் அமைதலாக இருந்தது.

குட்டீஸ், நாமும் கடவுளுக்கு பயந்து அவருக்கு பிரியமாக வாழும்போது, நாமும் கடவுளுடைய ஞானத்தை பெற்று சமாதானமாக வாழ தேவன் நமக்கு உதவி செய்வார்.



# 2 தானியேல்


குட்டீஸ், இந்த மாதம் தானியேல் என்ற அண்ணனைப் பற்றி படிப்போமா?

தானியேல் அண்ணன் தன்னோட சொந்த நாட்டிலிருந்து பாபிலோன் என்கிற நாட்டுக்கு அடிமையாக கொண்டுவரப்பட்டார். அந்த பாபிலோன் நாட்டை தரியுன்னு ஒரு ராஜா ஆரசாட்சி செஞ்சாரு. இந்த தானியேல் அண்ணே, அவருடைய ராஜ்ஜியத்தில் ஒரு முக்கியமான பெரிய பதவியில இருந்தாரு. அதனால அவருமேல மத்த பதவிகளில் இருந்தவங்க பொறாமைபட்டாங்க. அவரை எப்படியாவது அழிக்கனும்னு சமயம் பார்த்துட்டேயிருந்தாங்க.

இந்த தானியேல் அண்ணனுக்கு தினமும் 3 வேளை எருசலேமுக்கு நேராக தேவனை நோக்கி முழுங்காற்படியிட்டு ஜெபிக்கும் பழக்கம் இருந்தது. அந்த விஷயத்தில் தானியேல் அண்ணனை மாட்டிவிடலாமென்று அவங்கயெல்லாரும் ஒரு திட்டம் தீட்டினாங்க. அதென்னனா, 30 நாள் அளவும் ராஜாவை தவிர வேறு யாரையும் வணங்ககூடாது. அப்படி மீறி வணங்கினால் அவர்களை சிங்க கெபியிலே போட வேண்டும் என்று ராஜாவால் உத்தரவ போட பண்ணினாங்க.

எல்லா மனுஷரும் பயந்து, ராஜாவை மட்டும் வணங்கினாங்க; ஆனா தானியேல் அண்ணே அவர் எப்போதும் செய்ற மாதிரி 3 வேளையும் ஜெபம் பண்ணினார். அதனால் அவரை சிங்க கெபியிலே போட்டாங்க. ஆனால் தானியேல் அண்ணே, தேவன் மேல் உண்மையான நம்பிக்கை வச்சியிருந்ததால தேவன் சிங்கத்தோட வாயை கட்டிப்போட்டாரு. ராஜா அடுத்த நாள் கெபியில தானியேல் உயிரோட இருந்ததை பார்த்திட்டு, நீ வணங்குகிற தேவன் தான் உண்மயானவரு. அவரை தான் எல்லாரும் வணங்க வேண்டுமென்று கட்டளையிட்டார். அப்படியே தானியேல் அண்ணே மேல் பழிபோட்ட எல்லாரையும், அவங்க குடும்பத்தையும் சிங்க கெபியிலே போடவும் உத்தரவிட்டார்.

தானியேல் அண்ணே மாதிரி நாமும், தேவன் மேல் எந்த கஷ்டமான சமயத்திலும் சரி சந்தோஷமான சரி, உண்மையான நம்பிக்கை வச்சோம்னா நம்மையும் தேவன் காப்பாத்துவாரு. அந்த நம்பிக்கையை தினமும் ஜெபம் செய்வதினால் பெற்றுக் கொள்ளலாம்.



– குயினி பிலேமோன்.

# சிறுவர்க்கான கேள்விகள்



1. சாலமோனுடைய அப்பா, அம்மா யார்?
2. சாலமோன் தேவனிடம் என்ன கேட்டார்?
3. தேவன் சாலமோனுக்கு என்னவெல்லாம் கொடுத்தார்?
4. தானியேலின் தினசரி எத்தனை முறை ஜெபித்தார்?
5. தானியேலை எதற்குள் போட்டனர்?
6. தானியேலை தேவன் எப்படி காப்பாற்றினார்?



**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-05-2014**



# இம்மாதக் கேள்விகள்

1. இயேசுவை பரியாசம் செய்த யூத மத தலைவர்கள் யார்?
2. தன்னை துன்புறுத்தியவர்களுக்காக இயேசு என்ன செய்தார்?
3. அடியேனை நினைத்தருளும் என்று இயேசுவிடம் வேண்டினவன் யார்?
4. இயேசுவின் வலது இடது புறமாக அறையபட்டவர்கள் யார்?
5. எந்த திரைச்சீலை இரண்டாக கிழிந்தது?
6. என் தேவனே என்தேவனே ஏன் என்னை கைவிட்டீர் என்ற தீர்க்க தரிசன வசனபகுதி எங்குள்ளது?
7. நம்முடைய கிருபாதார பலி யார்?
8. எவ்வளவு நேரம் பூமியை இருள் கவ்வியது?
9. இயேசுவை அடக்கம் செய்த நூற்றுக்கதிபதியின் பெயர் என்ன?
10. காவல் காத்தவர்கள் இயேசுவை யாரென்று சொன்னர்கள்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 5-05-2014**

அனுப்ப வேண்டிய முகவரி :

சகோதரி. **பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு, அரசரடி
மதுரை - 625 016 செல்: 92 4421 4421

## சென்ற மாத புதில்கள்

| | |
|---|---|
| 1. மத்தேயு 3 : 8 | 6. லூக்கா 15 : 10 |
| 2. மத்தேயு 4 : 17 | 7. சங் : 19 : 7 |
| 3. லூக்கா 5 : 32 | 8. லூக்கா 15 : 18 |
| 4. லூக்கா 13 : 3 | 9. 1 கொரி 1 : 18 |
| 5. ரோமர் 1 : 16 | 10. 1 யோவான் 1 : 7 |

### மார்ச் மாதம் வாலிபர் பகுதி புதில் எழுதியவர்கள்

1. ஜெயராஜ் - பொள்ளாச்சி
2. ரோஸ் மேரி - எருக்கஞ்சேரி
3. V. ஷைனி - மதுரை
4. ஷாலி - மதுரை
5. P. சூர்ய பிரியா - திருமங்கலம்
6. P.C. சாம் - மதுரை
7. R. சேம் - உக்கிரன்கோட்டை
8. P.C. ஜெபக்கனி - மதுரை
9. டேஃப்னி பொன் புளோரா - சென்னை
10. P. கௌந்தர் பாண்டி - திருமங்கலம்
11. ஜாய்ஸ் சாலமோன் - ஈரோடு
12. R. ஷர்லி ரோஸ் - மதுரை
13. பொன் தினகரன் - மதுரை

### மார்ச் மாதம் பதில் எழுதியவர்கள்

1. S. ஜெயராஜ் - பொள்ளாச்சி
2. S. கேத்தரின் அருள் நேசம் - மதுரை
3. C. ரேச்சல் ஜீவகாந்தி - சேலம்
4. Mrs. ஜெமிமா நல்லையா - மதுரை
5. Mrs. ஞான சிரோன் மணி - சமயநல்லூர்
6. V. சுகந்தி - ஒத்தக்கடை
7. V. அஜித்தா - ஒத்தக்கடை
8. Y. ஜெயசுதா - சென்னை
9. V. ரம்யா - ஒத்தக்கடை
10. A. கௌசல்யா - ஒத்தக்கடை
11. M. புஷ்பராணி - நாமக்கல்
12. K. மோகன் - நாமக்கல்
13. R. சரோஜா - திருநெல்வேலி
14. Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
15. P. சூர்ய பிரியா - திருமங்கலம்
16. இந்திரா பாண்டி - திருமங்கலம்
17. Mrs. ரேச்சல் தமிழரசி - மதுரை
18. Mrs. மேரி சாராள் - சமயநல்லூர்
19. P. மேபல் சித்ரா - திருச்சி
20. Mrs. ரூபி ஜெபராஜ் - மதுரை
21. Mrs. எப்சி தாமஸ் - படப்பை
22. Mrs. காந்தா மனோகர் - திருச்சி
23. Mrs. ஹெலன் திலக் - மதுரை
24. பிரேமலதா சுந்தர் பாபு - செங்கல்பட்டு
25. Mrs. ஸ்டெல்லா வால்ட்டர் - கோவை
26. புளோரா சுந்தர் - மதுரை
27. Mrs. A. சந்திரா - மதுரை
28. Mrs. லில்லி ஆல்பர்ட் - நெல்லை
29. Mrs. மேரி ராஜ் - மதுரை
30. Mrs. ஜான்ரோஸ் - நாகர்கோவில்
31. ஞான சுந்தரி நாகராஜன் - நெல்லை
32. ஷில்லா ரிச்சர்டு தாஸ் - சென்னை
33. அலெக்சாண்டர் ஜிப்மர் சாலமோன் - சிவகங்கை
34. Mrs. ஞான சுந்தரி - கோவை
35. Mrs. வசந்தி வெஸ்லி -தென்காசி
36. பியூலா தாஸ் - சென்னை
37. G. பீற்றர் பால்ராஜ் - தூத்துக்குடி
38. Mrs. புஷ்பா பாலன் - பெங்களூர்
39. Mrs. லிங்கா ஜீவரத்தினம் - விருதுநகர்
40. R. பால் ஜெயராஜ் - சென்னை
41. Mrs. சுகந்தி ஜோன்ஸ் - திருச்சி
42. ஜெயமணி - கடலூர்
43. Mrs. அன்பு சுதந்திரம் - நெல்லை
44. தேவி ராஜசிங் - திருப்பூர்
45. G. புஸ்பா ஜேம்ஸ் - விருதுநகர்
46. DR. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
47. ஏசு நேசன் - பாண்டிச்சேரி

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# தின தியானம்

| நாள் | வாசிப்பு பகுதி | மனன வசனம் | தியான தலைப்பு | குறிப்பு வசனங்கள் | டிக் |
|---|---|---|---|---|---|
| 1. | யாத் 14:13-31 | சங் 121:7 | தேவனுடைய பாதுகாப்பு | நீதி 3:26, சங் 91:11<br>II தெச 3:3, உபா 33:12<br>யோசுவா 24:17 | ☐ |
| 2. | உபா 28:1-15 | சங் 115:13 | ஆசீர்வாதம் | சங் 29:11, ஆதி 12:2<br>லேவி 25:10,<br>உபா 28:8 | ☐ |
| 3. | எபே 2:1-22 | எபே 2:8 | தேவகிருபை | எபி 12:15,16, யாத் 33:19<br>சங் 63:3, ஏசா 54:10 | ☐ |
| 4. | யோனா 3:1-10 | லூக் 1:50 | தேவனுடைய இரக்கம் | நீதி 28:13, மத் 7:7<br>உபா 4:31, புல 3:32 | ☐ |
| 5. | யாத் 19:1-25 | வெளி 22:11 | பரிசுத்தம் | சங் 96:9, IIகொரி 7:1<br>எபி 12:14, லேவி 22:32 | ☐ |
| 6. | சங் 19:1-14 | II தீமோ 3:16,17 | கர்த்தருடைய வேதம் | யோவான் 12:48<br>யோவான் 5:39<br>சங் 119:1,113, யாக் 1:12 | ☐ |
| 7. | லூக்கா 18:1-17 | II தீமோ 2:1 | ஜெபம் பண்ணுங்கள் | லூக்கா 6:28<br>மத் 5:44, நீதி 15:29<br>I தெச 5:17 | ☐ |
| 8. | II பேதுரு 2:1-12 | நீதி 12:28 | தேவ நீதி | சங் 85:13, ஏசா 58:8<br>நீதி 10:2, யோபு 36:7 | ☐ |
| 9. | II தீமோ 4:1-18 | யோவான் 12:26 | தேவ ஊழியம் | வெளி 2:3<br>I கொரி 15:58<br>யாத் 20:24, தானி 12:3 | ☐ |
| 10. | யோபு 1 : 1-8 ; 42 : 1-10 | II நாளா 19:11 | உத்தமன் | நீதி 16:32, பிர 7:8<br>சங் 37:17<br>யோபு 8:20 | ☐ |
| 11. | எண் 12:1-16 | லூக்கா 16:10 | உண்மையுள்ளவன் | எபி 3:5, சங் 31:23<br>நீதி 11:13<br>வெளி 2:10 | ☐ |
| 12. | II ராஜா 12:1-19 | சங் 97:11 | செம்மையானவர்கள் | உபா 12:28, நீதி 23:16<br>சங் 9:7,8<br>நீதி 15:8 | ☐ |
| 13. | நீதி 10:1-32 | ரோமர் 3:24 | நீதிமான் | சங் 92:12, நீதி 11:21,8<br>சங் 55:22, நீதி 4:18 | ☐ |
| 14. | I சாமு 15:1-22 | லூக் 6:46 | கீழ்படியாமை | உபா 11:27, ரோமர் 2:8<br>I பேது 4:17 | ☐ |

| நாள் | வாசிப்பு பகுதி | மனன வசனம் | தியான தலைப்பு | குறிப்பு வசனங்கள் | டிக் |
|---|---|---|---|---|---|
| 15. | I சாமு 3:1-21 | மத் 7:21 | கீழ்படிதல் | அப் 5:29<br>II கொரி 10:5<br>எபே 5:21 | ☐ |
| 16. | II கொரி 8:1-24 | லூக் 6:38 | கொடுத்தல் | ஆதி 14:20, அப் 20:35<br>II கொரி 9 : 6,7<br>மல் 3:10 | ☐ |
| 17. | யாத் 3:1-15 | யோவான் 11:25 | நானே | யாத் 20:2,3, உபா 5:6<br>யோவான் 14:6;10:9 | ☐ |
| 18. | சங் 128 | பிர 12:3 | தேவனுக்கு பயப்படுதல் | பிர 8:12, யோபு 28:28<br>சங் 103:13, லூக் 12:5 | ☐ |
| 19. | யோவான் 20:1-18 | மத் 6:33 | தேவனைத் தேடுதல் | உபா 4:29, I நாளா 16:11<br>ஏசா 45:19, II நாளா 15:2 | ☐ |
| 20. | I யோவான் 4:1-16 | எபே 5:2 | அன்பு கூறுங்கள் | யோவான் 12:48<br>யோவான் 5:39<br>சங் 119:1,113, யாக் 1:12 | ☐ |
| 21. | ரோமர் 5:1-10 | யோவான் 3:16 | தேவனுடைய அன்பு | I யோவான் 4:16<br>உபா 23:5, ஓசி 11:4<br>எபே 2:4,5 | ☐ |
| 22. | மத் 4:1-11 | யாக் 1:13 | சோதனை | I தீமோ 6:9, எபி 2:18<br>II பேது 2:9, சங் 95:8<br>I கொரி 10:13 | ☐ |
| 23. | மத் 7:1-12 | ரோமர் 13:5 | தற்பரிசோதனை | யோபு 27:6<br>சங் 119:101<br>I கொரி 11:28,31 | ☐ |
| 24. | யோவான் 15:1-16 | லூக்கா 3:8 | கனிகொடுத்தல் | எபி 13:15, யாக் 3:18<br>யோவான் 15:8<br>கலா 5:22,23 | ☐ |
| 25. | சங் 27:1-14 | சங் 147:11 | காத்திருத்தல் | சங் 40:1, ஏசா 30:18<br>II பேதுரு 3:12<br>நீதி 8:34 | ☐ |
| 26. | யாக் 3:1-16 | யாக் 3:6 | நாவு / வார்த்தை | எபே 4:29<br>நீதி 21 :23<br>சங் 17:3 | ☐ |
| 27. | I சாமுவேல் 11:1-15 | மத் 6:22 | கண் / பார்வை | சங் 101:3, நீதி 23:26<br>பிர 6:9, I யோவா 2:16, | ☐ |
| 28. | மாற் 7:1-23 | நீதி 4:23 | இருதயம் | நீதி 11:20, சங் 51:10<br>எபி 3:12, யோசு 24:23 | ☐ |
| 29. | I சாமு 2:1-10 | I பேது 5:6 | உயர்வு | மத் 23:12, சங் 147:6<br>லூக் 1:52, யாக் 4:6,10 | ☐ |
| 30. | மத் 8:1-16 | மல் 4:2 | சுகம் | எரே 30:17, உபா 7:15<br>ஏசா 58:8, யாக் 5:15 | ☐ |

# ஒரிசா ஊழியங்கள்






ஒரிசாவில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு நம்முடைய ஆசிரியர் வழங்கும் வேதாகம ஆலோசனை





ஆண்களும், பெண்களுமாக சுமார் 7 இடங்களைச் சேர்ந்த 24 பேர் பட்டம் பெற்றனர்




ஒரியா மொழியில் கைப்பிரதிகள் வெளியிடப்பட்டது



உணவு வேளையின் போது மாணவர்கள்





ஆத்தும ஆதாய பயிற்சி பெற்ற விசுவாசிகளினால் திருமுழுக்குப்பெற்றோர்

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2001/14161
Postal Registration No. : MA/67/2012-2014
Posted at Arasaradi HPO on 10th, 11th April 2014




***If undelivered please return to :***

**EDITOR**
**KIRUBAIYULLA VARTHAI**
45 C/1, Church Lane,
Coronation Street,
Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421
92 4431 4431

**To**

Visit www.graciousword.org to read kv magazine online